**கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும்

முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனம்யில் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

| | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 24(அ) ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் பாதீடு செய்யப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கை வெவ்வேறாக சித்தரித்துக் காட்டக்கூடியவாறு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அவ்வாறு பாதீட்டு எண்ணிக்கைகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நியமத்தின் அறிவுரைகளின் படி பாதீடு செய்யப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கை வெவ்வேறாக சித்தரித்துக் காட்டக்கூடியவாறு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இற்கு இணங்காதவாறு காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் பணிக்கொடை ஒதுக்கங்கள் ரூபா 9,134,287 தொகை குறைவாகவும் மற்றும் மருத்துவ உதவி ஒதுக்கங்கள் ரூபா 202,000 தொகை மிகையாகவும் காட்டப்பட்டிருந்ததுடன், அட்டுருச் செலவு ரூபா 24,726,561 தொகை முதலீட்டு தொழிற்பாடுகளின் கீழ் பண உள்ளீடு என காட்டப்பட்டு அதன் கீழ் காட்டப்பட வேண்டிய ஒரு வருடத்தின் முதிர்வடையும் ரூபா 64,844,612 தொகை பெறுமதியான நிலையான வைப்புக்கள் காசும் காசுக்கு சமமானவைகளிற்கு கீழும் காசும் காசுக்கு சமமானவைகளிற்கு கீழ் காட்டப்பட வேண்டிய வங்கியில் பண மீதி ரூபா 202,000 தொகை குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | பணிக்கொடை ஒதுக்கத்துக்காக வழங்கியிருந்த பதில் சரியானதல்ல. கொள்வனவுக் கட்டளைகள் வழங்கப்பட்டு உபகரணங்கள் மற்றும் வேலைகள் அட்டுருவாகியுள்ளன. ஒரு வருடத்தில் முதிர்வடையும் நிலையான வைப்புக்கள் குறுகிய கால முதலீடு என இனங்காணப்பட்டது. பணமும் பணத்திற்கு சமமானவைகளின் பெறுமதி மற்றும் மருத்துவ உதவி பணமாக செலுத்தப்பட்டவை சரி செய்யப்பட வேண்டும். | நியமத்தின் அறிவுரையின் படி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் கடந்த கால அடிப்படையில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியிருந்த ரூபா 39,552,362 தொகை கடந்த கால அடிப்படையின் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் மீண்டும் மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கவில்லை. | நியம இலக்கம் 03 இன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கான கடந்த கால அடிப்படையில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த புத்தகப் பெறுமதி ரூபா 118,873,548 தொகைக்கான நிறுவனத்திற்கு சொந்தமான மொத்த வாகனங்கள் 57 தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றின் பயன்தரு ஆயுட்காலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் படி மீண்டும் மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கும் நியம இலக்கம் 07 இன் பந்தி 92(ஆ) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அச்சொத்துக்கள் தொடர்பாக வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனத்திற்கு சொந்தமாக காணப்படும் வாகனங்களை 2021 ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்து ஏடுகளில் பதிவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | நியம இலக்கம் 03 இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 47 இன் பிரகாரம் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி மீது நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மற்றும் ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஒவ்வொரு 03 வருடங்களுக்கு அல்லது 05 வருடங்களுக்கு ஒருமுறையோ மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், 2015 ஆண்டில் மீள்மதிப்பீடு செய்திருந்த பெறுமதி ரூபா 158,056,049 தொகைக்கான ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் 1997 ஆண்டு முதல் கொள்வனவு விலை ரூபா 65,000 தொகைக்கான ஹந்தானை உடுவெல 03 ஏக்கர் 35 பர்சஸ் காணியை மீள்மதிப்பீடு செய்து தற்போதைய பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | COVID – 19 நிலைமையில் மேற்கொள்ள முடியாமல் இருந்த மீள்மதிப்பீட்டு அலுவல்கள் 2021 ஆண்டில் மேற்கொள்வதற்கு பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் ஹந்தானை உடுவெல காணியை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஊ) | 2018 ஜனவரி 01 திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கப்படும் காலப்பகுதிகளுக்கான வருடாந்த நிதிக்கூற்றுக்களில் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கம் மேற்கொள்ளும் போது இலங்கை பொதுத்துறை கணிப்பீட்டு நியம இலக்கம் 19 இன் பிரகாரம் இயற்கணிய முறை (Actuarial Valuation Method) பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமல் பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 81,579,772 தொகை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | நிறுவனத்தின் ஆரம்பம் ஆரம்பம் முதல் பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் படி கணிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன என குறிப்பிடுகின்றேன். | பணிக்கொடை ஒதுக்கும் போது இயற்கணிய மதிப்பீட்டு முறை பயன்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்பு கணிப்பீடு | இருப்பு மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த போதும் பற்றாக்குறை மற்றும் | இருப்பு கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு பௌதீக |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதிக்குப் பதிலாக இருப்புப் புத்தகத்தின் படி பெறுமதியாகிய ரூபா 26,186,951 தொகை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருந்தன. அதன் காரணமாக பௌதீக மெய்மையாதல் அறிக்கையில் உட்படுத்தப்பட்டிருந்த ரூபா 218,436 தொகைக்கான 31 விடயங்களுக்கான இருப்பு குறைவும் மற்றும் ரூபா 27,181 தொகைக்கான 09 இருப்பு விடயங்களுக்கான மிகைகளுக்காக சீராக்கல் செய்திருக்காமை ரூபா 3,686,388 தொகை பெறுமதியான சேதமடைந்த மற்றும் பயன்படுத்தப்படாத இருப்புகள் காணப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருந்த இருப்புப் பெறுமதி சரியானவை என ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | மிகைகளுக்காக காரணங்களை பெற்று அவற்றை சரி செய்தல் மேற்கொள்ளப்பட்டு வந்தமையால் ரூபா 26,186,951 இற்கான பெறுமதி கணக்குகளில் உட்படுத்தப்பட்டன. | மெய்மையாதல் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆண்டின் போது ரூபா 7,892,731 தொகைக்கு கொள்வனவு செய்து மூலதனப்படுத்தியிருந்த சிறிய ஒளிச்சேர்க்கை அமைப்பு (Portable Photosynthesis System) 2018 ஆண்டின் போது மீண்டும் ஒரு முறை கணக்கீடு செய்து ஆண்டிற்கு 15 சதவீதம் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் ரூபா 7,892,734 தொகை, பெறுமானத் தேய்வுச் செலவு ரூபா 1,183,910 தொகை, திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 2,367,820 தொகை மற்றும் திரண்ட நிதியக் கணக்கு மீதி ரூபா 6,708,821 தொகை ஆக மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஏற்பட்டிருந்த தவறினை 2021 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பட்டிருந்த தவறுகளை கணக்குகளில் சரி செய்யப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனத்தின் செஸ் வரி வருமானம் கணக்கீடு செய்யும் கொள்கை அட்டுறு அடிப்படையில் இருக்க வேண்டிய போதிலும், லங்கா சீனி தனியார் கம்பனியின் செவனகல பிரிவிலிருந்து 2020 ஆண்டிற்காக | லங்கா சீனித் தனியார் கம்பனி (செவனகல) இருந்து செஸ் தொடர்பான தரவுகள் கோரப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அவற்றை வழங்கியிருக்காமையால் பெற வேண்டிய செஸ் வருமானத்தை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இற்கு இணங்க அட்டுறு அடிப்படையில் செஸ்வரி கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | பெறவேண்டிய ரூபா 1,611,460 இற்கான செஸ் வரியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், கல்ஓயா பெருந்தோட்டக் கம்பனியில் இருந்து 2019 ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 1,112,555 தொகை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 498,907 தொகை மிகையாகவும் கடன்பட்டோர் ரூபா 1,611,460 தொகை குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | கணிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது. 2019 ஆண்டு வரை பண அடிப்படையில் செஸ் வரி வருமானம் கணிக்கப்பட்டிருந்தமையால் கல்ஓயா கம்பனியில் இருந்து 2019 ஆண்டிற்காக கிடைத்திருந்த செஸ் வருமானம் 2020 ஆண்டிற்கான வருமானம் ஒன்றென எடுக்கப்பட்டுள்ளது. | செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | கட்டளைகள் அனுப்பப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை கிடைத்திருக்காத ரூபா 17,350,591 தொகை பெறுமதியான தளபாடங்கள், உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், விவசாய உபகரணங்கள், வெளிக்கள உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் மூலதனப்படுத்தியிருந்தமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமதியினால் மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டு இன்வொயிஸ்களும் கிடைக்கப்பட்டிருந்தமையால் அவற்றை 2020 ஆண்டிற்கான சொத்துக்கள் என மூலதனப்படுத்தப்பட்டது. | கிடைக்கப் பெறாத பண்டங்கள் கணக்கீடு செய்யப்படக் கூடாது. |
| (உ) | 2018 ஆண்டின் போது நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்தல் மேற்கொள்ளப்பட்டு அப்பெறுமதியை கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளும் போது உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களில் காணப்பட்ட ரூபா 4,785,456 தொகைக்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களில் ரூபா 4,785,456 தொகை பெறுமதியான தளபாடங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்பட்டிருந்த போதிலும் கூட்டும் போது ஏற்பட்டிருந்த வழு ஒன்றின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் இது விடுபட்டிருந்தது. 2021 நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும் என அறிவிக்கின்றேன். | கைவிடப்பட்ட தவறு 2021 ஆண்டு சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டில் இறுதியில் உள்ளவாறு ரூபா 4,453,369 தொகை பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ரூபா 4,825,436 தொகை எனவும், ரூபா 260,855 தொகைக்கான திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் ரூபா 552,652 தொகை எனவும், முறையே ரூபா 372,067 தொகை மற்றும் ரூபா 291,797 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | திறைசேரி உண்டியல்களின் சரியான முதலீட்டு வருமானம் மற்றும் வட்டி சரிசெய்தல் 2021 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டது. | திறைசேரி உண்டியல்களில் முதலீடுகள் மற்றும் அதற்கான வட்டி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் 03 இற்கு முற்கொடுப்பனவு ரூபா 558,475 தொகை பல வருட காலம் முதல் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்ட போதிலும் அவற்றை செலவு ஒன்றென்று கணக்கீடு செய்வதற்கு அல்லது மீதியை உறுப்படுத்தல் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 ஆண்டின் போது முற்கொடுப்பனவு மற்றும் ஏனைய வைப்புக்களுக்கான மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | முற்கொடுப்பனவு மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் மற்றும் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பௌதீக மெய்மையாதல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த 21 வகைகளைச் சேர்ந்த அலுவலக உபகரணங்கள், கருவிகள் மற்றும் தேவைப் பொருட்கள் 67 அலகுகளின் பெறுமதியை கணித்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், ஒரு பிரிவில் இருந்து இன்னொரு பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 80,000 பெறுமதியான 10 கதிரைகள் இரண்டு தடவைகள் பதிவு மேற்கொள்ளப்பட்டிருந்தன. | நிலையான சொத்துக்கள் மெய்மையாதலின் போது இனங்கண்டிருந்த இந்த சொத்து விடயங்களில் கொள்வனவு செய்த ஆண்டுகள் வெவ்வேறாக இனங்காண முடியாமல் உள்ளது. 2021 ஆண்டின் போது சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து ஏடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இரு தடவைகள் கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ள விடயம் தொடர்பாக 2021 ஆண்டில் உரிய சரி செய்தல்கள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாதல் அறிக்கைக்கு இணங்க சரியாக கணக்குகள் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

### 1.6.1 பெற வேண்டிய கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2015 ஆம் ஆண்டின் போது நிறுவனத்திற்கு ஆய்வுகூட உபகரணங்கள் இறக்குமதி செய்யும் போது பண்டங்கள் கிடைத்தல் குறிப்பிட்ட தினத்தை விட தாமதம் ஆகியமையால் நாணயப் பத்திரங்களுக்கு வங்கியினால் கூட்டப்பட்டிருந்த ரூபா 191,961 இற்கான கட்டணம் ஒன்று குறிப்பிட்ட வழங்குனர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் கணக்குகளில் தொடர்ந்தும் பெற வேண்டிய மீதி ஒன்றென காட்டப்பட்டிருந்தது. | பல நிறுவனங்களில் இருந்து பெற வேண்டியிருந்த இந்தத் தொகையினை அனுப்புமாறு தொடர்ச்சியாக நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டன. 2021 ஆம் ஆண்டின் போது அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 05 சீனி உற்பத்தி நிறுவனங்களில் இருந்து 09 மாதங்கள் முதல் 05 வருடங்களை விட மிகையான காலம் வரை நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 7,150,551 தொகையினை அறவீடு செய்வதற்கு நிறுவனத்திற்கு முடியாமல் இருந்ததுடன் 02 சீனிக் கம்பனிகளிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த செஸ் வரி ரூபா 5,020,500 தொகை, கரும்புத் தண்டு வழங்குதல் கட்டணம் ரூபா 1,130,051 தொகை மற்றும் கந்தளாய் சீனிக் கம்பனிக்கு வழங்கியிருந்த கடன் தொகை ரூபா 1,000,000 தொகையும் இதில் அடங்குகின்றன. | லங்கா சீனிக் கம்பனியின் செவனகல மற்றும் பெல்வத்த தொழிற்சாலைகளில் சீனி உற்பத்தி மீது அறவிடப்பட வேண்டிய செஸ் வரித் தொகை மற்றும் கரும்புத் தண்டு வழங்குதல் தொடர்பாக பெற வேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்கு தொடர்ச்சியாக கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் இது வரை செலுத்தியிருக்கவில்லை.<br>2010 ஆம் ஆண்டு கந்தளாய் சீனிக் கம்பனியில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,000,000 இற்கான தொகையினை அனுப்பும் படி அடிக்கடி நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் கிடைத்தல் சந்தேகத்துக்கு இடமாக இருக்கின்றது. | அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 5.4.12 | நிறுவனத்திற்கு பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக 2020 ஆம் ஆண்டில் 163 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 978,360 தொகைக்கான பெறுமதி கூட்டிய வரி தொடர்பான அறிக்கை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 ஆம் முதல் வெட் வரி சம்பந்தமான அறிக்கை உள்நாட்டு இறைவரி திணைக்கத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெட் வரி உள்ளடக்கத்திற்கான பணம் செலுத்திய பின்னர் தொடர்ந்து வரும் மாதத்தில் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி.104 | காணாமல் போனதென 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பௌதீக மெய்மையாளர் அறிக்கையில் காணப்பட்ட ரூபா 772,606 தொகைக்கான மோட்டார் சைக்கிள்கள், கையடக்கத் தொலைபேசிகள், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் 19 சொத்து அலகுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உண்மையாக என்ன நடைபெற்றதென அறிவிப்பதற்காக குறிப்பிட்ட பிரிவில் இருந்து பெற்ற விளக்கத்தின் படி 2021 ஆண்டில் உரியவாறு மீண்டும் அறிவிப்பதற்கு அல்லது குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | காணாமல் போயுள்ள சொத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி விசாரணை மேற்கொள்ள வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கந்தளாய் மற்றும் கிளிநொச்சி செயற்திட்டங்களின் நாளாந்த செலவுகளை அணவல் செய்வதற்காக ரூபா 100,000 உச்ச அளவு ஆக வங்கிக் காட் மூலம் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்வதற்காக இரண்டு வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட செலவு மற்றும் அதன் உச்ச எல்லை ஆகிய | உப நிலையங்களில் வேலைகளை இலகுவாக்கும் குறிக்கோளுடன் 2015 ஆம் ஆண்டு முதல் இந்தக் கணக்குகள் பேணப்பட்டிருந்த போதிலும் நடைபெறும் சிக்கல் நிலைமையில் இருந்து விடுபடுவதற்காக 2021 ஆண்டு முதல் சிறு காசு மீளளிப்பு | நிறுவனத்தின் அலுவல்களை நடாத்தும் போது முறையான நிதிக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் கடைபிடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்காமையால் தேவைக்கு மிகையாக வங்கியில் இருந்து பணம் பெறுவதற்காக வசதி வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டதுடன் அக் கணக்குகளின் மூலம் மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 219,115 தொகை மற்றும் ரூபா 207,368 தொகை செலவிடப்பட்டிருந்தது. | செய்யும் முறைக்கு மாற்றப்பட்டு இந்தக் கணக்குகளை மூடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். | |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டின் பின்னர் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காத பத்தரமுள்ள மக்கள் வங்கியில் பேணப்பட்டு வந்திருந்த சேமிப்புக் கணக்கில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட மீதி ரூபா 646,068 தொகையாகக் காணப்பட்டதுடன் அது எந்தக் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டதென தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | செயற்படாத வங்கிக் கணக்குகள் மூடப்பட வேண்டும். |

## 2. **நிதி மீளாய்வு**

### 2.1 **நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,630,769 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 41,630,865 தொகையாகக் காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 30,000,096 இற்கான பற்றாக்குறை குறைவடைதல் ஒன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 9,885,282 தொகையினால் அதிகரித்தல் மற்றும் செலவுகள் ரூபா 20,114,814 தொகையினால் வீழ்ச்சியடைதல் இந்த பற்றாக்குறை குறைவதற்கு முக்கியமான காரணமாக இருந்தது.

### 2.2 **பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குகளின் பகுப்பாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மூலதன மானியங்கள் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம் ஒன்றென இனங்கண்டிருந்த போதிலும் நிறுவனத்தின் நிதி விளைவுகள் தொடர்ச்சியாக பற்றாக்குறை ஒன்றாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் அப் பற்றாக்குறை ரூபா 11,630,769 தொகையில், திரண்ட பற்றாக்குறை ரூபா 53,261,634 தொகையும் காணப்பட்டது. இந்த சீரற்ற நிதி நிலைமையை கட்டுப்படுத்திக் கொள்வதற்காக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடந்த ஆண்டு ரூபா 268,257,000 தொகைக்கான அரச மீண்டுவரும் மற்றும் மூலதன உதவிகள் மீளாய்வாண்டின் போது ரூபா 299,180,000 தொகை வரை ரூபா 30,923,000 தொகையினால் அதாவது 12 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், கடந்த ஆண்டு ரூபா 38,500,906 தொகைக்கான நிறுவனம் உழைத்திருந்த வருமானம்

மீளாய்வாண்டின் போது ரூபா 17,463,188 தொகை வரை 45 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெள்ளை இலை நோய் (WLD) கட்டுப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூபா 3,250,000 ஆக இருந்த போதிலும், ரூபா 768,529 தொகை எனப்படும் 23.6 சதவீதத்தினால் மிகைத்து ரூபா 4,018,529 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளுக்காக திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் கிடைத்திருக்காத போதிலும் திட்டமிட்டவாறு குறைந்த மட்டத்தில் இந்த விடயங்களை மேற்கொள்வதற்கு நேரிட்டமையால் இந்தச் செலவு ஏற்பட்டது என குறிப்பிடுகின்றேன். | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு ஏற்பாடுகளை மிகைத்து செலவிடுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 78,580,000 இற்கான மூலதன ஏற்பாடுகளில் கிடைத்திருந்த கட்டுநிதி ரூபா 65,580,000 தொகையாக இருந்ததுடன் அவற்றில் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 3,937,043 தொகையாகக் காணப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் கிடைத்த கட்டுநிதியின் படி பெறுகை திட்டத்தை திருத்தியிருக்காததுடன், கிடைத்த பணத்தின் 40 சதவீதம் ஆகிய ரூபா 26,209,957 தொகை செலவிடப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருந்தமை மூலதனச் செலவு முகாமைத்துவம் திருப்திகரமாக காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவிய COVID-19 ஆபத்து காரணமாக திட்டமிடப்பட்டவாறு மூலதனச் சொத்துக்கள் தனதாக்குவதற்கு முடியாமல் போனதால் மற்றும் ரூபா 500,000 தொகையினை மிகைக்கும் விடயங்களுக்காக 2020.12.01 திகதி கிடைத்திருந்தமை ஆகிய காரணங்களினால் மூலதனச் செலவுகளுக்காக கிடைத்திருந்த கட்டுநிதிகள் சேமிப்பு ஏற்பட்டதென குறிப்பிடுகின்றேன். | நிறுவனத்தின் வருமானம் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து முக்கிய தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியவாறு சிறந்த திட்டமிடல் ஒன்று காணப்பட வேண்டும். |

## 3.3 கருத்து வேறுபாட்டுத் தன்மையுடனான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு அலுவலகத்தின் சாரதிகளுக்கு தங்குமிட வசதிகள் வழங்குவதற்காக பத்தரமுல்ல பிரதேசத்தில் வாடகைக்கு பெற்று 23 மாதங்கள் பயன்படுத்திய அறையின் வாடகை ஒப்பந்தத்தை 2019 திசெம்பர் மாதம் இரத்துச் செய்த பின்னர் உடன்படிக்கையின் பிரகாரம் திருப்பிப் பெறவேண்டிய ரூபா 90,000 இற்கான வைப்புத் தொகையில் ரூபா 45,530 தொகையினை கழித்திருந்த போதிலும் அது தொடர்பாக விசாரணை ஏதும் அல்லது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பொலிஸாரின் உதவியுடன் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 2004 ஆண்டின் போது அனுபவிக்கும் உரிமையை ஒப்படைக்கப்பட்டு ஆய்வுப் பயிர்ச் செய்கைகள் நடாத்தப்படும் தெனியாய என்சல்வத்த தோட்டத்தின் 5.7 ஹெக்டயர் காணியின் உரிமையை பெற்றிருக்காததுடன், அது தொடர்பான வழக்கொன்று நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு இருக்கும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 2,989,955 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டு அதன் நுழைபாதை, தடுப்புச் சுவர் கவலரண் மற்றும் படலை ஒன்று பொறுத்தப்பட்டிருந்தது. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான மதுரட பெருந்தோட்டக் கம்பனிக்கு வாடகை உரிமை காணப்படும் இந்தக் காணியின் நட்டஈடு செலுத்துவது தொடர்பாக காணப்படும் சிக்கல்களை தீர்த்துக்கொள்வதற்காக கொடபொல பிரதேச செயலகத்தின் மூலம் மொரவக மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பின் படி தனதாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முன்னர் சிக்கலற்ற உரிமையை பெற்றுக்கொள்ளல் உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும். |
| (இ) | நிறுவனத்தின் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு மாணவ உதவி என ரூபா 1,000 உம் மற்றும் பாடசாலை போக்குவரத்து கொடுப்பனவு என ரூபா 1,600 மற்றும் ரூபா 3,000 என வழங்குவதற்காக ரூபா 500,000 இற்கான மாணவ உதவி நிதியம் ஒன்று நிறுவப்பட்டிருந்த போதிலும் இதற்கு அடிப்படையான சட்டப் பிண்ணனி | நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் மீது பதவியணியினை ஊக்குவிக்கும் முறைமை ஒன்றென நீண்ட காலமாக மாணவ உதவி நிகழ்ச்சித் திட்டம் செயற்பட்டு வருகின்றன எனவும் மற்றும் உள்ளக உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களில் வதியும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை | அரசாங்க சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க கூடிய சலுகைகள் மாத்திரம் உத்தியோகத்தர்களுக்கு உரித்தாக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டிருக்கவில்லை. | போக்குவரத்து வசதி வழங்குவதற்கு நிறுவனத்தின் பஸ் வண்டி ஒன்று இன்மையால் இவ்வாறு போக்குவரத்துச் செலவு மீளளிப்புச் செய்யப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | |

**3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திடம் சட்டரீதியான உரிமை காணப்படாத கந்தளாயில் அமைந்துள்ள சுமார் 200 ஹெக்டயர் நிலப் பரப்பில் 2015,2017 மற்றும் 2020 ஆண்டுகளின் போது 4,550 மீற்றர் நீளமான மின் வேலியொன்று பொறுத்தி திருத்த வேலை செய்வதற்காக ரூபா 3,472,135 தொகையும், கரும்புத் தண்டுகளுக்காக வெந்நீர் பரிகார அலகொன்று நிறுவுவதற்காக ரூபா 5,404,458 தொகையுமாக கூட்டுத்தொகை ரூபா 8,876,593 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், கந்தளாய் சீனித்தொழிற்சாலை பல வருடகாலமாக செயலிழந்து காணப்பட்டமையால் மேற்கொள்ளப்பட்ட செலவு பயனற்ற செலவுவொன்றாக மாறியுள்ளது. | அரசாங்கத்தினால் கந்தளாய் சீனித் தொழிற்சாலை மீண்டும் ஆரம்பிப்பதற்காக எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாக வரிசை அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுரையின் படி தேவையான ஆய்வு உதவிகள் பெற்றுக்கொள்வதற்காக திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த விஷேட நிதியம் ஒன்றின் மூலமாக கந்தளாய் சீனிக் கம்பனி அமைந்துள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான காணியின் சுமார் 200 ஹெக்டயர் பகுதியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை பராமிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் காணியின் சட்ட ரீதியான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. | அபிவிருத்திச் செலவுகளின் மூலம் உரிய பலன்களை பெற்றுக்கொள்ள வேண்டும். |

**3.5 ஒப்பந்த வேலை நிர்வாகத்தின் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெனியாய உப நிலையத்தின் நுழை பாதை தொடர்பான ஒப்பந்த வேலையில் மற்றும் பயிர்வள முகாமைத்துவப் பிரிவில் ஆய்வுகூட மேசை நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலையில் தேவையினை இனங்கண்டு உரிய விவரக் குறிப்புகள் தயாரிக்காமல் முறையே ரூபா 1,200,936 இற்கான மற்றும் ரூபா 582,111 இற்கான பெறுமதிகளை உடைய ஒப்பந்த | வெளி தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் மதிப்பீடுகளில் காணப்பட்ட வழுக்கல் காரணமாக வாய்மொழி மூலம் கலந்துரையாடி இந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலை உடன்படிக்கைகளில் அடங்கியுள்ள விடயங்களில் | அரச பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்க நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேலைகள் வழங்கப்பட்ட பின்னர் நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தினால் வாய் மொழிமூல அறிவுரையின் மீது கணியப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்காத விடயங்களை நிறைவேற்றிக் கொள்ளப்பட்டமையால் ஒப்பந்தக்காரர்களினால் முறையே ரூபா 2,992,591 தொகை மற்றும் ரூபா 1,149,897 ஆக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பில் பத்திரங்களுக்கு முறையே ரூபா 850,463 தொகை மற்றும் ரூபா 616,140 தொகை வீதம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு முதலாவது ஒப்பந்த வேலைக்காக ரூபா 1,522,318 இற்கான தொகையொன்று கணக்குகளில் இருந்து ஒதுக்கப்பட்டிருந்தமையால் நிறுவனத்தின் ஒப்பந்தவேலை அலுவல்கள் பெறுகை வழிகாட்டல்களில் இருந்து விளகி முறையற்ற விதமாக மேற்கொள்ளப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. வேலை அத்தியட்சகரின் அளவையின் அடிப்படையில் மீதித் தொகையை செலுத்துவதற்கு கவனம் செலுத்தப்படுகின்றது. | |
| (ஆ) | பயிர் போசாக்குப் பிரிவில் மாதிரிகள் தயாரிக்கும் கட்டிடத்தில் புதிய பகுதி ஒன்று சேர்க்கும் மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 1,828,081 தொகைக்கு 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தவேலை கூரை தூண்கள் இல்லாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் கீழிறங்கிய காரணத்தினால் ஒப்பந்தவேலைகாரருக்கு ரூபா 581,341 இற்கான தொகை ஒன்று செலுத்தப்பட்டு ஒப்பந்த வேலை இடை நிறுத்தப்பட்டு அதன் பின்னர் கூரையை அகற்றி 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 987,043 தொகையொன்று செலவிடப்பட்டு மீண்டும் கூரை செய்யப்பட்டிருந்ததுடன், அதன் மீதி வேலைப் பகுதி வாய்மொழி மூல அறிவுரையின் மீது வேறு ஒப்பந்தகாரர் ஒருவருக்கு ரூபா 758,373 தொகை செலுத்தப்பட்டு 2020 ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் படி | வெளி தொழிநுட்ப உத்தியோத்தர்களின் மதிப்பீடுகளில் காணப்பட்ட பலவீனங்கள் காரணமாக மேலதிக வேலை மற்றும் கூரையை மீண்டும் சரி செய்வதற்கு நேரிட்டதுடன், இந்த மதிப்பீட்டில் அடங்கியிருக்காத வேலை அத்தியட்சகரின் வாய்மொழி மூல அறிவுரையின் படி மேற்கொள்ளப்பட்ட விடயங்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளல் தொடர்பாக தீர்மானம் ஒன்றெடுப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு மற்றும் பெறுகைக் குழு நடவடிக்கை எடுத்து வருகின்றன. | நிறுவனத்தின் தேவையினை இனங்கண்டு முறையான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் அரச பெறுகை வழிகாட்டலுக்கு இணங்க நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

இந்த வேலை சிக்கனமான கொடுக்கல் வாங்கல் ஒன்று என அவதானிக்க முடியாதுள்ளது.

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிறுவனத்தின் சிரேஷ்ட, மூன்றாம் தர மற்றும் இரண்டாம் தர அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 86 பேரில் 16 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் ஆரம்ப பதவியணி அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 107 உம், உள்ளவாறான எண்ணிக்கை 136 ஆகக் காணப்பட்டமையால் மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியான 193 ஐ மிகைத்து 13 பதவியணிகள் அதிகரித்திருந்தது. மேலும், நிறுவனத்தின் சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் ஆகிய பணிப்பாளர் பதவி மீளாய்வாண்டு ஒக்தோபர் மாதம் முதல் வெற்றிடமாக பதில் கடமை அடிப்படையில் நடாத்தப்பட்டு வருகின்றது. | ஊழியர்கள் 37 பேருக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் பதவி நிரந்தரப்பட்டிருந்தமையால் 107 இற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப பதவியணியில் உள்ளவாறான பதவியணி 136 ஆகும். பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று பதவியில் கடமையாற்றிய உத்தியோகத்தர் முன் அறிவித்தல் இன்றி 2020/09/15 திகதி திடீரென கேட்டுவிலகியமையால் வெற்றிடத்தை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 ஜுன் 06 ஆம் திகதிய பீஈடி/12 இலக்கங் கொண்ட அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 மற்றும் 6.5.3 பந்திகளின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களுடன் வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான வரைபு வருடாந்த அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் வரைபு வருடாந்த அறிக்கை தற்போது சமர்ப்பிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களுடன் வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**4.2 வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அமைச்சுக்கு அனுப்புவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். | குறிப்பிட்ட நாட்களில் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |